தகப்பனின் அன்பு

ஒரு கிராமத்தில் ஒரு தகப்பனும் மகனும் வாழ்ந்து வந்தார்கள். தகப்பனின் முகத்தில் ஒரு பெரிய தழும்பு இருந்தது. இதைப் பார்த்த சக மாணவர்கள் அந்த வாலிபனிடம், "ஏண்டா, உன் அப்பா முகம் இப்படி பயமாகவும், பயங்கரமாகவும், அருவருப்பாகவும் இருக்கு?" என்று சொல்லி அவனை கேலி கிண்டல் செய்வார்கள். இதனால் மனம் உடைந்த மகன் தன் அப்பாவிடம் கோபமாகவும், வெறுப்பாகவும் பேசுவான். தன் அப்பாவுடன் வெளியே செல்லக்கூட தயங்குவான். இதனால் இவன் தன் அப்பாவின் அன்பை புரிந்து கொள்ளாமல் விலகிப் போனான். ஒரு நாள் அவன் அப்பாவிடம் மிகவும் கடினமாகப் பேசினான். "உங்க முகத்தைப் பார்க்க எனக்குப் பிடிக்கவேயில்லை. நான் உங்களை விட்டுப் போகிறேன். நீங்கள் எனக்கு வேண்டாம்" என்று சொல்ல, தகப்பன், "மகனே, நான் என்ன தப்பு செய்தேன்?" என்று கேட்க, இவன், "என் நண்பர்கள் என்னை கேலி கிண்டல் செய்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் உங்க முகத்தில் உள்ள தழும்பு தான். இது எனக்கு அசிங்கமாயிருக்கிறது" என்று அவன் சொல்ல, தகப்பன், "மகனே, நீ ஒரு நிமிடம் இருப்பா" என்று சொல்லி வீட்டுக்குள்ளே போனார். கையில் ஒரு புகைப்படத்தைக் கொண்டு வந்து தன் மகனிடம் கொடுத்தான். இதை பார்த்த மகன், "யாருப்பா இவர்? இவ்வளவு அழகாயிருக்கிறார்" என்று கேட்க, அதற்கு அப்பா, "என் மகனே, நீ குழந்தையாக இருந்த போது உன்னை தூங்க வைத்து விட்டு உம் அம்மா கடை வீதி வரை போயிருந்தாங்க. நம்ம வீடு திடீர் என்று தீ பற்றி எரிந்து கொண்டே இருந்தது. உடனே ஓடி காப்பாற்றியதால் வந்த தழும்புத்தான் இது" என்று சொன்னார். இதை கேட்ட மகன் கண்ணீரோடு, "உங்க தியாக அன்பை நான் புரிந்து கொள்ளாமல் நடந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள் அப்பா" என்று சொன்னான். தகப்பன் தன் இரு கரங்களை விரித்து "என் மகனே" என்று சொல்லி அவனை தன் மார்போடு அணைத்துக் கொண்டார்.

இதை வாசிக்கும் மகனே, மகளே! ஆண்டவர் இயேசு மிகுந்த அன்பானவர் என்று வேதம் சொல்கிறது. "அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று சொல்கிறது. (1 யோவான் 4:8). மகனே, மகளே! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உனக்காகவும், எனக்காகவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் அழகை இழந்தார். எதற்காக? நம் பாவங்களுக்காகவும், அக்கிரமங்களுக்காகவும் இயேசு சிலுவையில் பாடுகளை சுமந்தார் (ஏசாயா 53:2). "அவருக்கு அழகுமில்லை சௌந்தரியமுமில்லை. அவரைப் பார்க்கும்போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது." ஏன் தெரியுமா? அவர் நம்மேல் வைத்த அளவில்லா அன்பினால் தான் நாம் பெற வேண்டிய பாவ தண்டனையை இயேசு சிலுவையில் ஏற்றுக் கொண்டார். பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரிந்தியர் 5:21). ஏன் தெரியுமா? இயேசு மகா பரிசுத்த தெய்வம். நம்மை பரிசுத்தப்படுத்துகிறவர் இயேசு மட்டுமே. "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" (1 தெசலோனிக்கேயர் 4:7). ஆண்டவர் இயேசு நம்மை பரிசுத்தப்படுத்தி பாதுகாத்து ஆசீர்வதித்து ஆயுள் முழுவதும் கூடவேயிருந்து வழிநடத்துவார்.

அன்புக்கு அடையாளம் இயேசுதான். இந்த உலகத்தில் அன்பு எப்படி இருக்கிறது? பணமிருந்தால், சொத்திருந்தால், உன்னிடம் எதையோ ஒன்றை பெற்றுக் கொள்ளவேண்டுமென்றால்தான், அன்பாய் இருப்பது போல் பழகுவார்கள். இல்லையென்றால் உன்னை ஒரு மனிதனாகவே மதிக்கமாட்டார்கள். "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16). தேவ அன்பு மட்டும் தான் உண்மையான அன்பு. இயேசுவை நம்புங்கள், அவர் உங்களை நல்வழியில் நடத்துவார். அப்பொழுது, சந்தோஷமும், சமாதானமும் நிறைவாய் பெற்றுக் கொள்ளலாம். அவரோடு கூட நித்திய நித்திய காலம் நம்முடைய ஆத்துமா வாழும். ஆமென்!

மேலும், இயேசுவை பற்றி அறிய விரும்பினால் அருகில் உள்ள திருச்சபையை அணுகுங்கள்.

ஜெப உதவிக்கு :